# வெருகல் பிரதேச சபை

---

## திருக்கோணமலை மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுக்கள்

---

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 28 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 21 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகள் திருத்தப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டிற்கான திருத்திய நிதிக்கூற்றுக்கள் 30 மார்ச் 2015 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெருகல் பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்நன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டில் சேதனபசளை தயாரிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட பீப்பாக்களுக்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு ரூபா.198,475 செலுத்த வேண்டி இருந்த போதிலும் செலுத்த வேண்டியதாக ரூபா.498,475 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டதனால் செலுத்த வேண்டிய பணம் ரூபா.300,000 தொகையால் அதிகரித்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) சுழயன சுழட்டநச இயந்திரத்தை வாடகைக்கு வழங்கிய வகையில் மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய வருமானம் ரூபா.80,000 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.2 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சபைத் தலைவர், ஊழியர்கள், மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா.585,783 கூட்டு மொத்த தொகையான முற்பணங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) ரூபா.1,046,670 கூட்டுத் தொகையான அரசிறைகள் அறவிடப்படாது நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்படுகின்றது. இதனை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) ரூபா.47,954 கூட்டுத் தொகையான நான்கு சில்லறைக் கடன் கொடுத்தோர் மீதிகள் கொடுத்து தீர்க்கப்படாது ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்படுகின்றன.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| காணிகளும், கட்டிடங்களும் | 33,084,089 | காணி கட்டிடங்கள் பதிவேடு |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 7,085,137 | மோட்டார் வாகனப் பதிவேடு |
| பொதுக் களஞ்சியம் | 75,118 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை, விபரப்பட்டியல் |
| வருமான கடன்பட்டோர் | 2,066,660 | உறுதிப்படுத்தல் கடிதம். |
| கடன் கொடுத்தோர் | 1,070,441 | கடன் கொடுத்தோர் பதிவேடு |

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) மாகாணநிதி ஒழுங்கு விதி | |
| (i) விதி இலக்கம் 237 | 2 வருடங்களுக்கு முன்னர் சபையால் வழங்கப்பட்ட ரூபா.18,152 கூட்டு மொத்த பெறுமதியான ஏழு காசோலைகள் பணமாக மாற்றுவதற்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத போதிலும் அவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி இலக்கம் 432.1 | 2013ஆம் ஆண்டு ஒரு வாகன திருத்தத்திற்காக ரூபா.67,065 செலவு மேற்கொண்டிருந்த போதும் வாகன சம்பவ குறிப்பு புத்தகத்தில் அவை பதியப்படவில்லை. |

2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா.2,518,975 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.166,307 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.2,352,668 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளவாறான வருமானம், வருமான நிலுவை என்பன

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திரண்ட நிலுவை 31.12.2013 |
|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகளும் வரிகளும் | 301 | 382 | (81) |
| வாடகைகள் | 678 | 647 | (31) |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 953 | 2,640 | 1,607 |
| ஏனைய வருமானம் | 366 | 358 | 08 |
| | 2,298 | 4,027 | 39 |

3 .செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) பிரமாண அடிப்படை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சேதனக்கூட்டடுப் பசளை தயாரிப்பதற்காக மீளாய்வாண்டில 157 கொள்கலன்கள் ரூபா.498,475 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச சபையால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டமை தொடர்பாக 2014 செப்தெம்பர் 07இல் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது 10 பயணாளிகள் மாதிரித் தெரிவுச் செவ்வைக்கு உட்படுத்தப்பட்டதுடன் பிரதேச சபையால் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த 03 பயணாளிகள் அக்கொள்கலன்களை பெற்றுக் கொள்ளாதிருந்தமையும் 07 பயணாளிகள் கொள்கலன்களை இதுவரை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான ஒரு கெப் வாகனத்தை திருத்தம் செய்வதற்காக ரூபா.198,500 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கேள்வி நடைமுறை பின்பற்றப்படாது வாகன திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) வாகனப் பொறியியலாளரிடமிருந்து வாகனத் திருத்தம் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கையும் வேலை திருப்தியாக மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் அறிக்கையும் கணக்காய்வுத் திகதியான 2014 செப்தெம்பர் 09 வரை பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) பிரதேச சபை நிதி நிர்வாக ஒழுங்கு விதி இலக்கம் 99இன் பிரகாரம் எல்லா உறுதிச்சீட்டுக்களும் சான்று படுத்தப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தும் சான்றுபடுத்தும் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படாமல் இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) காசோலை வழங்கும் பதிவேட்டில் பதியப்படாமல் குறித்த காசோலை வழங்கப்பட்டிருந்தது.

(இ) கணணி, மின்சார மோட்டார், நீர் வடிகட்டி, நீர்விநியோக பொருட்கள் என்பன ரூபா.178,145 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதேச சபை நிதி நிர்வாக ஒழுங்கு விதி இலக்கம் 99இன் பிரகாரம் எல்லா உறுதிச்சீட்டுக்களும் சான்று படுத்தப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தும் சான்றுபடுத்தும் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) காசோலை வழங்கும் பதிவேட்டில் பதியப்படாமல் குறித்த காசோலை வழங்கப்பட்டிருந்தது.

(iv) கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பிரதேச சபை நிதி நிர்வாக ஒழுங்கு விதி இலக்கம் 115இன் பிரகாரம் களஞ்சியப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவிலலை.

(ஈ) 2013ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை வாசகர்களுக்கு வழங்கப்பட்ட 87 நூலகப்புத்தகங்களை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அத்துடன் அங்கத்துவ உறுப்புரிமைக் கட்டணத்தை செலுத்தாத இரண்டு வாசகர்களுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தது. நாற்பத்திரெண்டு அங்கத்துவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அங்கத்துவப் படிவங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக புத்தகங்களை திருப்பி ஒப்படைக்காத வாசகர்கள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 3.2 ஒப்பந்தக் நிர்வாகம்

### (அ) சிறுவர் பூங்கா நிர்மாணம்

சிறுவர் பூங்கா ஒன்றினை நிர்மாணிப்பதற்காக வெருகல் பிரதேச சபையால் 2013 சனவரி 16 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

(i) உடன்படிக்கையின் படி நிர்மாண வேலைகள் 2013 மார்ச் 01 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் காணக்காய்வுத் திகதியான 2013 செத்தெம்பர் 05ஆந் திகதி வரை ஒப்பந்த வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா.3,526,216 பெறுமதியான செயலாற்றல் முறி 2013 மார்ச் 28 ஆந் திகதி காலாவதியாகிய போதிலும் அதனை கால நீடிப்புச் செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்தக்காரரால் குறித்த பூங்காவிற்கு உபகரணங்களை வழங்கி பொருத்துவதற்காக அவருக்கு ரூபா.1,930,800 தொகை செலுத்தப்பட்ட போதிலும் ஒப்பந்தக்காரரால் அந்த உபகரணங்கள் கணக்காய்வுத் திகதி வரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஒப்பந்தக்காரரால் பிரதான வாயில் கதவு நிர்மாணிக்கப்படாதிருந்த போதிலும் வாயில் கதவு திருப்திகரமாக நிர்மாணிக்கப்பட்டதாக சான்றுபடுத்தப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு ரூபா.20,538 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைத் துறை பிரதான வீதி தொடக்கம் புன்னையடி இறங்கு துறை வீதி வரையுமான வீதியை புனர்நிர்மாணம் செய்தல்

---

மேற்குறித்த வீதிப் புனர்நிர்மான வேலை ஒப்பந்தமானது ரூபா.11,538,793 பெறுமதிக்கு 2012 சனவரி 10 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண வேலைகள் 2012 ஏப்ரல் 10 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் பூர்த்தி செய்த வேலைக்காக ரூபா.1,204,560 தொகையைப் பெற்ற பின்னர் ஒப்பந்தகாரர் வேலையை கைவிட்டுச் சென்றுள்ளார்.

(ii) ஒப்பந்தகாரர் ஆயத்தப்படுத்த முற்பணமாக ரூபா.2,307,000 தொகையைப் பெற்ற பின்னர் நிர்மாணவேலையைக் கைவிட்டுச் சென்ற போதிலும் முற்பண முறியை செல்லுபடியாகும் காலத்திற்குள் பணமாக மாற்றத் தவறியதனால் பிரதேசசபைக்கு ரூபா.2,307,000 தொகையான இழப்பு ஏற்பட்டுள்ளது.

(இ) புன்னையடி இறங்குதுறை வீதிக்கு கொங்கிறீட் கல் பதித்து வீதியை புனரமைத்தல்

---

மேற்குறித்த வீதிப் புனரமைப்பு வேலையானது ரூபா.17,686,256 பெறுமதிக்கு 03 மாதங்களில் பூர்த்தி செய்யப்படுவதற்காக 2012 ஏப்ரல் 03 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண வேலைகள் 2012 ஆகஸ்ட் 04 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் பூர்த்தி செய்த

வேலைக்காக ரூபா.1,655,251 தொகையைப் பெற்ற பின்னர் ஒப்பந்தகாரர் வேலையை கைவிட்டுச் சென்றுள்ளார்.

(ii) ஒப்பந்தகாரர் நிர்மாணவேலையைக் கைவிட்டுச் சென்ற போதிலும் ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட ரூபா.884,313 தொகையான செயலாற்றல் முறியை செல்லுபடியாகும் காலத்திற்குள் காசாக்கத் தவறியதால் சபை அத்தொகையை இழந்துள்ளது.

3.3 பயன்படுத்தப்படாமல் உள்ள சபையின் சொத்துக்கள்

பின்வரும் சொத்துக்கள் அவற்றிக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் உள்ளன.

| சொத்து விபரம் | சொத்தின் பெறுமதி | பயன்படுத்தப்படாத காலம் |
|---|---|---|
| நான்கு சக்கர உழவு இயந்திரம் | 500,000 | 04 வருடங்கள் |
| இரண்டு சக்கர உழவு இயந்திரம் தண்ணீர் இறைக்கும் பம்பி | பெறமுடியவில்லை | 04 வருடங்கள் |
| சந்தைக் கடை தொகுதி | 2,272,800 | 02 வருடங்கள் |

3.4 மனிதவள முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியணியினர் வகை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
| நிறைவேற்றுனர் | 01 | -- | 01 | -- |
| உதவியாளர்கள் | 15 | 12 | 03 | -- |
| சிற்றூழியர்கள் | 30 | 13 | 17 | -- |
| ஏனையவர்கள் | -- | 33 | -- | 33 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதி விசேட முகாமைத்துவ தரம் ஐ பதவிக்கான ஒரு வெற்றிடமும் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான மூன்று வெற்றிடங்களும் கடந்த 05 வருட காலமாக நிரப்பப்படாமல் வெற்றிடமாக உள்ளன.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(இ) முற்பணங்களின் அறவீடு

(ஈ) வருமான சேகரிப்பு

(உ) பெறுகை நடைமுறை

(ஊ) ஒப்பந்த நிர்வாகம்